21st November 1963]

அருணா சர்க்கரை ஆலை

* 408 கேள்வி.—திரு. கி. நாராயணசாமி பிள்ளை : கனம் கைத் தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) விருத்தாசலம் வட்டம் பெண்ணாகரத்தில் உள்ள அருணா சர்க்கரை ஆலைக்கு லைசென்ஸ் எப்போது கொடுக்கப்பட்டது ?

(இ) அந்தக் கம்பெனியில் Madras State Industrial Finance Corporation எவ்வளவு பணம் முதலீடு போட்டிருக்கின்றது ?

(உ) மேற்படி ஆலைக்காக அரசாங்கம் பண உதவி செய்துள்ளதா ?

(எ) ஆண்டுகள் பல ஆகியும் சர்க்கரை ஆலை ஆரம்பிக்காததால் அதற்கு கொடுத்த லைசென்சை ரத்து செய்ய உத்தேசமுண்டா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : (அ) 1960-ம் ஆண்டு அக்டோபர் மாதம் லைசென்ஸ் வழங்கப்பட்டது.

(இ) Madras Industrial Investment Corpora ion பிரஸ்தாப சர்க்கரை ஆலையில் ரூ. 7,50,000 முதலீடு செய்துள்ளது.

(உ) & (எ) இல்லை.

Drinking water scheme for Rasipuram

* 409 Q.—SRI N. P. SENGOTTUVELU : Will the Hon. the Minister for Public Health be pleased to state—

(*a*) whether there is any proposal to change the route for laying the pipe line to bring drinking water to Rasipuram from Panamarathupatti ; and

(*b*) if so, the reasons therefor?

THE HON. SRIMATHI JOTHI VENCATACHELLUM : (*a*) No.

(*b*) Does not arise.

திரு. நா. ப. செங்கோட்டுவேலு : பைப் லைன் அமைக்கும் பாதையை மாற்றியமைக்க வேண்டுமென்ற காரணத்தால்தான் வேலை தாமதப்படுகிறது என்று அங்குள்ள அதிகாரிகள் சொன்னார்கள். அமைச்சர் அவர்கள் பதிலில் 'இல்லை' என்று கூறியிருக்கிறார்கள். இந்த மாற்றத்திற்குக் காரணம் என்ன ?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : அந்த மாதிரி மாற்றியமைப்பதற்கு எந்த விதமான 'ப்ரொபோசலும்' கிடையாது.

குடிநீர் திட்டம் (விருத்தாசலம் பிர்க்கா)

* 410 கேள்வி.—திரு. கி. நாராயணசாமி பிள்ளை : கனம் சுகாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) விருத்தாசலம் பிர்க்கா, ஊமங்கலம் பிர்க்கா இவைகளிலுள்ள மேட்டுப்பாங்கான கிராமங்களுக்கு குடிதண்ணீர் சப்ளை செய்ய திட்டமுண்டா ?